1970 மார்ச் 25]

அதற்கும் இயக்குநராக இருக்கிறார்கள், குற்றச்சாட்டுகளைப்பற்றி விரைவில் விசாரணைசெய்து முடிவைக் கூறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. விசாரணை செய்துகொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் கூறியபடி இரண்டு ஆண்டுக் காலமாகியும் இதற்குப் பதில் வராததால், அதை விரைவுபடுத்தச் சொல்லப்பட்டிருக்கிறது. விரைவிலே பதில் வந்த பிறகு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

DR. H. V. HANDE : Sir, may I know whether the Government have made any arrangements for making periodical inspections and verifications with regard to the Library's accounts, contingent bills, cash book and actual cash balance, bills for the books supplied, binding grant, etc. ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மேற்படி பீரியாடிக்கல் இன்ஸ்பெக்ஷன் இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது எந்த நிலையிலே இருக்கிறது என்பதுபற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற அத்தகைய குற்றச்சாட்டுகள் இருந்தால் தனிக் கேள்வி போட்டாலோ அல்லது என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தாலோ அதுபற்றி விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Aid to Technical Institutions

* 535 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether any code to aid Technical Institutions in the State has been received from the Union Ministry?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : தெளிவான விளக்கங்கள் அடங்கிய உதவிமானிய விதிக்கோவையை வகுப்பதற்கென்று இந்திய அரசினால் அமைக்கப்பட்ட உதவிமானிய விதிக்கோவைக் குழுவின் பரிவுரைகளை இணைத்து இந்திய அரசு கடிதம் ஒன்றை இம்மாநிலத்திற்கு அனுப்பியுள்ளது. தமிழ்நாட்டிற்கான உதவிமானிய விதிக்கோவை மாநில அரசினால் முன்பு ஏற்கெனவே வகுக்கப்பட்டுள்ளது. இந்த விதிக்கோவையே அவர்களது பரிவுரைக்கு மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த மாநிலத்தில் உள்ள தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மானியம் எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது? கடந்த ஆண்டு தமிழகத்தில் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது? இதை உயர்த்துவதுபற்றி அரசு பரிசீலிக்குமா? மத்திய அரசு அனுப்பியுள்ள விதிக் கோவைக்கும், மாநில அரசின் விதிக் கோவைக்கும் என்ன மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த விதிக்கோவையின்படி இப்பொழுது பொறியியல் கல்லூரி, பல்தொழில் நுட்பப் பள்ளி (பாலிடெக்னிக்) ஆகியவைகளுக்கு துண்டு விழுகின்ற

தொகையில் ஏற்கனவே 66 2/3 சதவிகிதம் என்ற அளவுக்கு இருந்ததை 75 சதவிகிதத்திற்கு உயர்த்தியிருக்கிறோம். ஆகவே, 25 சதவிகிதம் அரசு மானியமாகத் தருகிறது. மற்றவற்றை அந்த நிறுவனமே போட்டுக்கொள்ளவேண்டும். தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில் 100 சதவிகிதத்தையும் அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. பல்தொழில் நுட்பப் பள்ளி, அதற்கெல்லாம் அவர்கள் அறக்கட்டளை வைத்து, அதன் மூலம் வருகிற வருவாயில் ரூ. 40,000 தொழில் நுட்பப் பள்ளியை நடத்துவதற்குத் தரவேண்டும் பொறியியல் கல்லூரிக்கு ரூ. ஒரு லட்சம் தரவேண்டும் என்று நிர்வாகத்தினருக்கு விதிகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. இந்த விதிக்கோவையைப் பொறுத்த அளவில் அகில இந்திய அரசு நம்முடைய விதிக்கோவையை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, விதிக்கோவையைத் தயாரித்து எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருக்கிறது. அந்த வகையில் அதிகமான வேறுபாடுகள் கொள்ளவேண்டிய அவசியமில்லை. திருத்தங்கள் செய்யவேண்டிய அவசியமில்லை. நம்முடைய விதிக்கோவையை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, வேறு மாநிலங்களும் கடைப்பிடிக்கக்கூடிய அளவுக்கு மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது. அதனால், அதிக மாற்றம் இல்லை.

Age of retirement of non-teaching staff in high schools

* 536 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) The age of retirement for non-teaching staff of aided secondary schools in Tamil Nadu;

(*b*) whether they are allowed to work up to the age of sixty years; and

(*c*) the numbers of such persons who are now affected by the new orders?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) 55 வயது.

(இ) ஆம்.

(உ) ஓய்வு பெறும் வயதை 55 ஆக நிர்ணயித்தும், 55க்கு மேல் தொடர்ந்து பணியிலிருந்து அனுமதிக்கக் கூடாதென்றும் போடப் பட்ட ஆணையை மீண்டும் ஆய்வு செய்வதற்காக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இப்பொழுது ஒருவரும் பாதிக்கப்படவில்லை.

திரு. கே. விநயகம்: டீச்சிங் ஸ்டாபாக இல்லாமல் அலுவலகத்தில் பணிசெய்கின்ற அலுவலர்களுடைய ஓய்வு பெறுகின்ற வயதை 58-ஆக உயர்த்துவதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு வரையில் ஆசிரியர்கள், எழுத்தர்கள் ஆகியோர்களின் ஓய்வு பெறும் வயது 55 என்றுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்